RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 120 | மே.7 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழக ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்

சென்னை, மே.7-

தமிழக ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை ஆளுநர் மாளிகையில் சந்தித்து, தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தவெக தலைவர் விஜய், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை பிற்பகல் 3.30 மணி அளவில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அவருடன் செங்கோட்டையன், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்டோர் உடன் சென்றிருந்தனர்.

விஜய்யை வரவேற்ற ஆளுநர் அர்லேகர், அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதையடுத்து, விஜய் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

பதவியேற்பு விழாவை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நாளை காலை 11.30 மணி அளவில் பிரம்மாண்டமாக நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. முதல்வராக விஜய் நாளை பதவியேற்பார் என்று கூறப்படுகிறது.

அவருடன் அமைச்சர்களும் பதவியேற்க உள்ளனர். அமைச்சரவையில் செங்கோட்டையன், ஜேசிடி. பிரபாகர், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல்குமார், மரிய வில்சன், ராஜ்மோகன், அருண்ராஜ், சத்தியபாமா, விஜயலட்சுமி, ஸ்ரீநாத் உள்ளிட்டோர் இடம்பெற வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க



118 உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகளின் ஆதரவை விஜய் கோரி இருந்தார். காங்கிரஸ் கட்சி 5 தொகுதிகளிலும், சிபிஐ, சிபிஎம், விசிக ஆகியவை தலா 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதால், இக்கட்சிகள் இணைந்தால் பெரும்பான்மையை எளிதில் பெற முடியும்.

விஜய்யின் கோரிக்கையை ஏற்று, தவெகவுக்கு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சி இன்று அறிவித்தது. இது தொடர்பாக அக்கட்சியின் தமிழக பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவை வழங்குமாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு தவெக தலைவர் விஜய் முறைப்படி கோரிக்கை விடுத்திருந்தார். இதை ஏற்று, தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்கு முழு ஆதரவை வழங்க காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. எந்தவொரு வகுப்புவாத சக்தியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்காமல் தமிழக வெற்றி கழகம் விலக்கி வைப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆதரவு வழங்கப்படுகிறது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர மரியாதை, அவரவர்க்கு உரிய பங்கு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கூட்டணி, தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களிலும் தொடரும்" என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராஜேஷ் குமார், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் விஜய்யை பனையூர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

சிபிஐ, சிபிஎம், விசிக ஆகிய கட்சிகள் தவெக கூட்டணியில் இணைவது குறித்து தங்கள் கட்சியினருடன் ஆலோசித்து தெரிவிப்பதாக கூறியுள்ளனர். அதிமுக தரப்பிலும், விஜய்க்கு ஆதரவு அளிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

## பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயலாற்றுவோம்: சீமான் உறுதி



சென்னை: மே.7-

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் தமிழர் கட்சி செயலாற்றும் என்று அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வாக்களித்த அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றி பெற்ற அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், பொறுப்பேற்கவுள்ள விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழக புதிய அரசுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழகம் எனும் தாய் நிலத்தின் நலனுக்காகவும், உயர்வுக்காகவும் தொடர்ச்சியாக களப்பணியாற்றி, மண்ணுக்கும், மக்களுக்குமான ஆக்கப்பூர்வ மாற்று அரசியலை பொறுப்புள்ள எதிர்க்கட்சியாய் நின்று நாம் தமிழர் கட்சி செயலாற்றும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தோல்வி குறித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2021ம் ஆண்டு கட்சி நிர்வாகிகள், வேட்பாளர்களுடன் கண்கலங்கியபடி பேசிய பழைய காணொளி பதிவு தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி பரவி வருகிறது.

"நான் வென்று சட்டப்பேரவைக்குள் செல்ல வேண்டும் என்று எனக்கு விருப்பமில்லை. நாட்டை வெல்லாமல், ஒரு சில சீட்டுகளை வெல்வதில் ஒன்றும் ஆக போவதில்லை. ஆனாலும் வென்று உள்ளே போயிருக்கலாம். மக்களின் குரலாக ஒலித்திருக்கலாம்.

இது நம் தோல்வி அல்ல. மக்களின் தோல்வி." என்று அதில் சீமான் பேசியிருப்பது தற்போது நெட்டிசன்களிடையே பேசும் பொருளாகி இருக்கிறது.

## தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவளிப்பது எங்கள் முதுகில் குத்தும் செயல்: திமுக

சென்னை: மே.7-

தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என காங்கிரஸ் எடுத்துள்ள முடிவு, திமுகவின் முதுகில் குத்தும் செயல் என்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சரவணன் அண்ணாதுரை விமர்சித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள சரவணன் அண்ணாதுரை, "தவெகவுக்கு ஆதரவு அளிப்பது என்ற முடிவை காங்கிரஸ் கட்சி எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாடு மிகவும் குறுகிய பார்வை கொண்டது; தொலைநோக்குப் பார்வை அற்றது. இப்படி ஒரு முடிவை எடுப்பதற்காக அவர்கள் வருந்த நேரிடும்.

2029 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த தேர்தலில் பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்றிவிட முடியும் என நாங்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால், காங்கிரஸ் இப்போது எடுத்துள்ள இந்த முடிவு காரணமாக, அவர்கள் ஒரு நிலையற்ற கூட்டணி கட்சியாக மாறிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சியை நம்ப முடியாது என்ற ஒரு கருத்து நாடு முழுவதும் பரவியுள்ளது.


தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு நாள்தான் ஆகிறது. அதற்குள் காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு அளிக்க முடிவு செய்திருப்பது, முதுகில் குத்தும் செயல். பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் ஆகியவற்றுக்கு இடம் கொடுக்க விரும்பவில்லை என்றும் எனவே இந்த முடிவை எடுப்பதாகவும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இந்த முடிவை காங்கிரஸ் கட்சி முழு மனதுடன் எடுத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் இந்த முடிவு (இண்டியா) கூட்டணியில் உள்ள பிற கட்சிகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும். மக்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராக அவர்கள் செயல்படுகிறார்கள் என்றால், அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ், உத்தவ் தாக்கரே உள்ளிட்ட தலைவர்களின் மனதில் இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? நாங்கள் ஒருபோதும் காங்கிரஸ் கட்சியை ஏமாற்றியதில்லை.

2016ம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கணிசமான வெற்றியை அக்கட்சி பெற்றது. அப்போது, பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் தரப்பினர், ராகுல் காந்தியை கேவலமாக விமர்சித்தனர். அந்த சூழலில், எங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தினார். அது ஒரு துணிச்சலான நடவடிக்கையாக அமைந்தது. அங்கிருந்துதான் 2024 தேர்தலில் ராகுல் காந்தியின் செல்வாக்கு உயர்ந்தது. இவை அனைத்தும் திமுகவின் கடின உழைப்பாலும் அது செலவிட்ட வளங்களாலுமே சாத்தியமானது. அதனால்தான், அவர்களால் இப்போது ஐந்து தொகுதிகளில் வெற்றி பெற முடிந்தது.

தவெக பெரும்பான்மை இலக்கை எட்ட 11 இடங்கள் தேவைப்படுகின்றன. 47 இடங்களைக் கொண்டுள்ள அதிமுக நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயராக இருக்கிறது. நீங்கள் விஜய்யாக இருந்தால் யாருடைய பேச்சைக் கேட்பீர்கள்? ஐந்து இடங்களைக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியையா அல்லது 47 இடங்களைக் கொண்டுள்ள அதிமுகவையா? காங்கிரஸ் கட்சி மிகத் தவறான ஒரு முடிவை எடுத்துவிட்டதாக நான் கருதுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.1840 உயர்வு



சென்னை: மே.7-

சென்னையில் நேற்று (மே.6) தங்கம் விலை பவுனுக்கு ரூ.1840 உயர்ந்துள்ளது. அதேபோல் வெள்ளியின் விலையும் உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அந்தவகையில், தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. சென்னையில் நேற்று தங்கம் விலையானது கிராமுக்கு ரூ.180 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,820க்கும், பவுனுக்கு ரூ.1440 குறைந்து ஒரு பவுன் ரூ.1,10,560க்கு விற்பனையானது.

இந்நிலையில் தங்கம் விலையானது இன்று அதிரடியாக உயர்ந்து உள்ளது. அதன்படி, சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,050க்கும், பவுனுக்கு ரூ.1840 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,12,400க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை நிலவரம்: சென்னையில் நேற்று ஒரு கிராம் வெள்ளி ரூ.265க்கு விற்பனையான நிலையில் இன்று கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.270க்கு விற்பனையாகிறது. கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,70,000க்கு விற்பனை செய்யப்படுகிறது.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## "காங்கிரஸ் முதுகில் குத்துவதாக திமுக பேசுவது புலம்பல்" மாணிக்கம் தாகூர்



சென்னை: மே.7-

தவெகவுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் காங்கிரஸ் கட்சி திமுகவின் முதுகில் குத்தி இருப்பதாக அக்கட்சி கூறி இருப்பது புலம்பல் என்று மாணிக்கம் தாகூர் விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் அக்கட்சியின் எம்.பி.யுமான மாணிக்கம் தாக்ர் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, திமுக கூட்டணியில் காங்கிரஸ் நீடிக்குமா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "எங்களைப் பொருத்தவரை இந்த கூட்டணி என்பது தேர்தலுக்காக உருவாக்கப்பட்டது. 2026 தேர்தல் முடிந்துவிட்டது. அடுத்து என்ன செய்வது என்பது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அரசியல் விவகாரக் குழு நேற்றிரவு கலந்து ஆலோசித்தது.

இரவு 10 மணி முதல் 12 மணி வரை ஜூம் மீட்டிங்கில் ஆலோசனை நடைபெற்றது. இதில், 29 உறுப்பினர்கள் கலந்து கொண்டோம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், முன்னாள் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டோம். அதில் கட்சியின் அடுத்தகட்ட செயல்பாடு குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்த முடிவை தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் அறிவிப்பார்" என மாணிக்கம் தாகூர் பதில் அளித்தார்.

தவெகவுக்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில் காங்கிரஸ் ஆட்சியில் பங்கு பெறுமா என்ற கேள்விக்கு, "குழந்தை பிறப்பதற்கு முன்பே பெயர் வைப்பது போன்றது உங்கள் கேள்வி. இந்த தேர்தலில் தமிழக வாக்காளர்கள் தெளிவான ஒரு முடிவை எடுத்துள்ளார்கள். தேர்தலுக்கு முன்பு சிலர், ஆட்சியில் பங்கு என்பதை தமிழகம் ஏற்காது என்றெல்லாம் சிலர் சொன்னார்கள். அவர்களின் இந்த பேச்சுக்கு தமிழக மக்கள் பதில் சொல்லிவிட்டார்கள்" என மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு திமுக, அதிமுக இரண்டும் இல்லாத ஒரு கட்சியின் தலைமையில் ஆட்சி அமைய இருப்பது குறித்து என்ன கருதுகிறீர்கள் என்ற கேள்விக்கு, "திமுக, அதிமுக முன்வைக்கும் அதே அரசியல் கருத்துகளைத்தான், கொள்கைகளைத்தான் தவெகவும் முன்வைக்கிறது. எம்ஜிஆர், கருணாநிதி என்ன அரசியலை பேசினார்களோ அதே அரசியலைத்தான் விஜய்யும் பேசுகிறார். எங்களைப் பொருத்தவரை, இந்த மண் பாஜகவுக்கு எதிரான மண்; ஆர்எஸ்எஸ் அமைப்புக்கு எதிரான மண்; இந்த மண் வெறுப்பு அரசியலுக்கு எதிரான மண் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்" என மாணிக்கம் தாகூர் கூறினார்.

தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுப்பது திமுகவின் முதுகில் குத்தும் செயல் என திமுக செய்தித் தொடர்பாளர் சரவணன் அண்ணாதுரை கூறி இருக்கிறாரே என்ற கேள்விக்கு, "சரவணன் போன்றவர்கள் பத்திரிகைகளில் வேண்டுமானால் பேசிக்கொண்டிருக்கலாம். எங்களைப் பொருத்தவரை காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அரசியல் விவகாரக் குழு முடிவெடுத்திருக்கிறது. அந்த முடிவை கிரிஷ் சோடங்கர் அறிவிப்பார். சரவணன் போன்றவர்கள் கூறி இருப்பது புலம்பல்.

எங்களைப் பொருத்தவரை பாஜக, ஆர்எஸ்எஸ் வரக்கூடாது. அதற்காகவே நாங்கள் போராடுகிறோம். சரவணன் போன்றவர்கள் இது குறித்து புரியாமல் பேசுகிறார்கள். அவரது பேச்சு பாஜகவுக்கு ஆதரவானது. இது வன்மத்தில் இருந்து உருவாகும் கருத்து. தமிழகத்தின் நன்மையைத்தான் பார்க்க வேண்டும். தனக்கு (திமுகவுக்கு) கிடைக்கவில்லை என்பதற்காக யாருக்கும் கிடைக்கக்கூடாது என நினைப்பது வன்மமான சிந்தனை. இதைத்தான் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள்" என மாணிக்கம் தாகூர் விமர்சித்துள்ளார்.



## தண்டல்கழனி கிராமத்தில் ஒரே வேலையில் பல வருடங்களாக உழைத்துவரும் 32 தொழிலாளர்களுக்கு விருது வழங்கும் விழா

மாதவரம், மே.7-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி தண்டல்கழனி கிராமம் பாலாஜி நகர் கம்பர் தெரு ஸ்ரீ லட்சுமி அம்மன், ஸ்ரீ பகவான் வெங்கடேச பெருமாள் கோயில் அருகே உழைப்பாளர் தினமாம் மே தினத்தை முன்னிட்டு தண்டல்கழனி கிராம இளைஞர்கள் சார்பில் தண்ணீர்ப்பந்தல் திறப்பு மற்றும் தண்டல்கழனி பகுதியில் பல வருடங்களாக உழைக்கும் 32 உழைப்பாளர்களுக்கு விருது வழங்கும் விழா தண்டல்கழனி கிராம இளைஞர்கள் சிம்பு, கமல், சிவா, விக்கி, லோகேஷ், பாலா, சரவணன், ராமு உள்ளிட்ட பொறுப்பாளர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னதாக தண்டல்கழனி சர்வீஸ் சாலையில் பொதுமக்களின் தாகம்தீர்க்க முன்னாள் அதிமுக கவுன்சிலரும் தொழிலதிபருமான எம்.சிவகுமார் தலைமை ஏற்று தண்ணீர்ப்பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு சுவையான குளிர்ந்த மோரினை வழங்கினார். பின்னர் விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் கவுன்சிலரும் தொழிலதிபருமான எம்.சிவகுமார், காவல் உதவி ஆய்வாளர் பணி ஓய்வு இ.சந்திரசேகரன், காவல் உதவி ஆய்வாளர் இ.சிவகுமார், தொழிலதிபர் ஏமநாதன் ஆகியோர் கலந்துகொண்டு தண்டல்கழனி கிராமத்தில் ஒரே வேலையில் பல வருடங்களாக உழைத்துவரும் 32 தொழிலாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருதினை வழங்கி வாழ்த்தினர். இதில் சமூக ஆர்வலர்கள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## வாக்காளபெருமக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில், குன்னம் தொகுதியின் வளர்ச்சிக்காக பாடுபடுவேன்



பெரம்பலூர், மே.7-

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் ஐந்தாவது முறையாகவும், குன்னம் சட்டமன்ற தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிட வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர் தளபதி M. K. Stalin அவர்களுக்கும், கழக இளம் தலைவர் மரியாதைக்குரிய Udhaya-nidhi Stalin அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

குன்னம் தொகுதியில் மூன்றாவது முறையாக வெற்றி பெறவைத்த குன்னம் தொகுதி வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

வாக்காளபெருமக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில், குன்னம் தொகுதியின் வளர்ச்சிக்காக பாடுபடுவேன்.

எனது வெற்றிக்காக குன்னம் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் எழுச்சித்தமிழர் அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும், மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் சண்முகம் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

மேலும் வெற்றிக்காகக் களத்தில் சிப்பாய்களாக நின்று அயராது உழைத்த நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் செயல்வீரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

கழகத் தலைவர் அவர்களின் உறுதிமிக்கக் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டு, அவரது வழிகாட்டலில் நம் பயணத்தைத் தொடர்வோம் என அரியலூர் மாவட்ட கழக செயலாளரும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

## வணிகர் தினத்தை முன்னிட்டு மனிதநேய வணிகர் சங்கத்தின் சார்பில் பொது மக்களுக்காக தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு






தாம்பரம் மே.07-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மே5 வணிகர் தினத்தை முன்னிட்டு மனிதநேய வணிகர் சங்கத்தின் சார்பில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட எம்விஎஸ் செயலாளர் ஏ.அப்துல் முனாப் தலைமையில் சண்முகம் சாலை ஜும்மா பள்ளிவாசல் எதிரில் பொது மக்களுக்காக தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை மனிதநேய மக்கள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் திறந்து வைத்து பொதுமக்களுக்கு தண்ணீர் பழம் வெள்ளரிக்காய், மோர், ரோஸ் மில்க் ஆகியவை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன், மாவட்டச் செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாவட்ட பொருளாளர் சபியுல்லா, மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி, எம்டிஎஸ்.மாநில பொருளாளர் ஏ.ஆசிக் ஹமீது, மாவட்ட துணைச் செயலாளர் அப்துல் காதர், பி.சாகுல் ஹமீது மற்றும் தாம்பரம் மத்திய பகுதி தலைவர் எம்.ஜலாலுதீன் மத்திய பகுதி செயலாளர் எம்.கே.அப்துல் ரஜாக், அப்துல் சமது மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள் மத்திய பகுதி நிர்வாகிகள் வார்டு நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## தி.மு.க. ஸ்டாலின் உடன் நடிகர் ரஜினிகாந்த் சந்திப்பு

சென்னை மே.7-

இக்கட்டான நேரத்திலும் உடன் இருப்பேன் வெற்றி பெற்ற நேரத்தில் மட்டுமல்ல, இக்கட்டான சூழ்நிலையில் உங்களோடு இருப்பேன். திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் உடன் நடிகர் ரஜினிகாந்த் சந்திப்பு

## ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி வைபவம் நிகழ்ச்சி





மாதவரம், மே.7-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பிள்ளையார் கோயில் தெருவில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகுஸ்ரீ செல்வவிநாயகர்ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி வைபவம் நிகழ்ச்சி ஆன்மீக சிந்தனையாளர் ஓ.கே.பாபு மற்றும் ஆலய பொறுப்பாளர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர் ஸ்ரீ செல்வ விநாயகர் சுவாமிக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், குங்குமம், பன்னீர், சந்தனம், தேன், ஜவ்வாது உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் உற்சவருக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் மேளதாளத்துடன் ஆலய மாடவீதி உலா நடைபெற்றது. இதில் கோவிந்தராஜ், விஜி, கணபதி, வேலு, சீனுவெங்கட், உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.




## சீன பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 26 பேர் உயிரிழப்பு

பெய்ஜிங்:மே.7-

சீனாவின் ஹுனான் மாகாணத் தலைநகர் சாங்ஷாவின் கீழ் உள்ள லியுயாங் நகரில், ஹுவா ஷெங் பட்டாசு உற்பத்தி ஆலையில் நேற்று முன்தினம் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

மேலும் 3 மீட்பு ரோபோக்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இந்த விபத்தில் 26 பேர் உயிரிழந்ததாகவும் 61 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். வெடி விபத்து நடந்த இடம் 2 வெடிமருந்து கிடங்குகளுக்கு அருகில் அமைந்துள்ளதால், மீட்புப்படையினர் அருகிலுள்ள குடியிருப்பாளர்களை வெளியேற்றியுள்ளனர். சாங்ஷா நகர மேயர் சென் போஷாங் கூறும்போது, ''விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் ஆழ்ந்த துயரத்திலும் மனவருத்தத்திலும் இருக்கிறோம். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், பாதிக்கப்பட்டகுடியிருப்பாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார். இதனிடையே பட்டாசு உற்பத்தி நிறுவனத்தின் பொறுப்பாளரை கைது செய்துள்ள போலீஸார், அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



## ஜெகதாப் கிராமத்தில் ஸ்ரீ வேடியப்பன்-முத்து வேடியம்மாள் திருக்கோவிலில் கும்பாபிஷேக நிறைவு விழா

### 5,000 பேருக்கு அன்னதானம்

கிருஷ்ணகிரி, மே07-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் அடுத்த ஜெகதாப் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வேடியப்பன் அருள்மிகு முத்து வேடியம்மாள் திருக்கோவிலில் வருடாந்திர கும்பாபிஷேக நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவை முன்னிட்டு மிட்டஅள்ளி ஊராட்சி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எல். சுப்பிரமணியன் ஏற்பாட்டில் கோவிலில் சிறப்பு அபிஷேக பூஜைகள் நடத்தப்பட்டன. பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும், சுமார் 5,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு விழா சிறப்பிக்கப்பட்டது. இந்த அன்னதானத்தில் பக்தர்கள் ஆர்வமுடன் பங்கேற்று உணவு பெற்றனர்.

நிகழ்வில் ஊர் கவுண்டர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். ஆன்மிக உணர்வுடன் நடைபெற்ற இந்த கும்பாபிஷேக நிறைவு விழா, பக்தர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

## மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சியை பிடித்தது ட்ரம்ப் வாழ்த்து

சென்னை.மே.7-

மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சியை பிடித்த நிலையில், பிரதமர் மோடிக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார். கடந்த தேர்தலில் 77 இடங்களில் வென்ற பாஜக, இந்த முறை 207 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது

## ரூ.23,437 கோடி மதிப்பில் மூன்று ரயில்வே திட்டங்கள்



புதுடெல்லி: மே07-

பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில், ரயில்வே அமைச்சகத்தின் ரூ.23,437 கோடி மதிப்பிலான மூன்று முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள 19 மாவட்டங்களை உள்ளடக்கிய இந்தத் திட்டங்கள் மூலம், இந்திய ரயில்வேயின் தற்போதைய வழித்தடங்களுடன் கூடுதலாக சுமார் 901 கி.மீ. தொலைவு இணைக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தின்படி, நாக்தா ரூ மதுரா, குண்டக்கல் ரூ வாடி, புர்ஹ்வால் ரூ சீதாப்பூர் ஆகிய வழித்தடங்களில் 3வது மற்றும் 4வது ரயில் பாதைகள் அமைக்கப்பட உள்ளன. ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், ''அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட வழித் தடங்களில் இந்தப் புதிய பாதைகள் அமைக்கப்படுவதால், முக்கிய நகரங்களுக்கு இடையேயான ரயில் இயக்கம் சீராகும். பிராந்திய மக்களின் வேலை வாய்ப்பு, சுய தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும்'' என்றார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34ல் இருந்து (தலைமை நீதிபதி உட்பட) 38 ஆக உயர்த்தும் திட்டத்துக்கும் மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

## தாராபுரத்தில் கோழிப்பண்ணை உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் தீ விபத்து

### ரூ10 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் தயாரிப்பு மூலப் பொருட்கள் தீயில் கருகி சேதம், 2 மணி நேரம் போராடிய தீயணைப்புத் துறையினர்



திருப்பூர் மே07-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சோளக்கடை வீதி கோட்டைமேடு குறுக்குத்தெரு பகுதியில் உள்ளது சுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமான அபிராமி அரிசி ஆலை செயல்பட்டு வந்த கட்டிடம், இதன் ஒரு பகுதியை பாலாஜி 30 என்பவர் வாடகைக்கு எடுத்து அதில் பாலாஜி ட்ரேடர்ஸ் என்ற பெயரில் கோழி பண்ணைகளுக்கு தேவையான நாசில்கள், கோழிகளுக்கு தண்ணீர் வைக்கும் உபகரணங்கள் உள்ளிட்டவைகளை தயாரிக்கும் இயந்திரங்களை பொருத்தி அதிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கோழிப்பண்ணை நிறுவனங்களுக்கு பொருட்களை தயாரித்து வழங்கி வருகிறார்.

இந்நிலையில் பிற்பகல் 2 மணி அளவில் உற்பத்தி கூடத்தில் ஊழியர்கள்யாரும் இல்லாத போது அதில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக தொழில் கூடத்திற்குள் கடுமையான புகைமூட்டம் ஏற்பட்டு அக்கம் பக்கத்தினர் பீதியுடன் கூச்சலிட்டனர், தொழிற்சாலையின் கதவை கடப்பாரையால் அடித்து உடைக்க முயற்சி செய்தனர் சம்பவம் குறித்து தாராபுரம் தீயணைப்புத் துறையினருக்கு உடனடியாக தகவல் அளிக்கப்பட்டதை யடுத்து நிலைய அலுவலர் ரவிச்சந்திரன் தலைமையில் 15க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அனைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் தயாரிப்பு பொருட்கள் அனைத்தும் பிளாஸ்டிக் பொருட்களாக இருந்ததால் கொழுந்து விட்டு எறிந்த தீயை அணைப்பதில் பெரும் சவாலாக இருந்தது, உடனடியாக மின் இணைப்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு 2 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்,

நடைபெற்ற தீ விபத்தில் கோழிப்பண்ணை உபகரணங்கள் தயாரிக்கும் இயந்திரங்கள் மூலப்பொருட்கள் மேலும் கட்டிடத்தின் இடிபாடுகள் உட்பட சுமார் 10 லட்ச ரூபாய் பொருட்கள் தீயில் கருகி நாசம் அடைந்ததாக பாதிக்கப்பட்ட தொழிற்சாலையின் உரிமையாளர் பாலாஜி கூறினார், சம்பவம் குறித்து தாராபுரம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கண்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார் தீயணைப்புத் துறையினர் விரைவாக செயல்பட்டதால் அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் தீ பரவாமல் தடுக்கப்பட்டது

## 20 மாநிலங்களில் ரூ.53 கோடி சைபர் மோசடியில் ஈடுபட்ட 10 பேர் கைது



காந்திநகர்:மே07-

இணைய வழி மோசடிக்கு எதிரான ஆபரேஷன் மியூல் 2.0 நடவடிக்கையின் ஒரு பகுதியாக குஜராத் மாநில சைபர் பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், முன்னாள் மகாராஷ்டிரா அமைச்சர் பாபா சித்திக் கொலை வழக்கில் தொடர்புடைய சல்மான் வோரா என்பவருக்கு ஆனந்த் நகரை சேர்ந்த சாஹில்மியா ஷபீர்மியா மாலேக் தன்னுடைய கர்நாடக வங்கி கணக்கு எண்ணை வழங்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

சாஹில் மியாவை கைது செய்து விசாரணை நடத்திய போது இணைய வழி மூலம் 20 மாநிலங்களை சேர்ந்தவர்களிடம் ரூ.53.55 கோடி மோசடி செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் சம்மந்தப்பட்ட நபர்கள் கமிஷன் தொகையை பெற்று கொண்டு இணைய வழி மோசடிகளில் ஈடுபட்டுள்ளது தெரியவந்தது. இதில் சம்மந்தப்பட்ட மேலும் 9 பேரை கைது செய்தனர்

# போச்சம்பள்ளி விற்பனை கூடத்தில்இநாம் முறையில் ரூ.13.37 லட்சத்திற்குகொப்பரை தேங்காய் வர்த்தகம்

கிருஷ்ணகிரி, மே.07-

கிருஷ்ணகிரி மாவட்டம்போச்சம்பள்ளியில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இநாம் முறையில் 9895 கிலோ கொப்பரை தேங்காய் ரூ.13 லட்சத்து 37 ஆயிரத்து 74 க்கு விற்பனையானது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இநாம் முறையில் நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்தில் 9895 கிலோ கொப்பரை தேங்காயை விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வந்தனர். ஒரு கிலோ அதிகபட்சமாக ரூ.145.69 க்கும், குறைந்தபட்சம் ரூ.76.19க்கும், சராசரியாக




ரூ.143க்கும் என மொத்தம் ரூ.13 லட்சத்து 37 ஆயிரத்து 74க்கு விற்பனையானது. இதன் மூலம் 70 விவசாயிகள் பயன் பெற்றனர். இது தொடர்பாக போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் அருள் வேந்தன் கூறியதாவது: விற்பனை கூடத்தில் தேசிய மின்னணு வேளாண் சந்தை (இநாம்) முறையில் விளை பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஏலத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில் கொப்பரை தேங்காய் நல்ல விலைக்கு விற்பனையானது. விற்பனை செய்யப்பட்ட கொள்முதல் தொகை உடனடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. மேலும், பருத்தி மற்றும் நெல் ஏலமும் நடைபெற்று வருகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# சமயபுர மாரியம்மன் கோவிலில் 21ஆம் ஆண்டு சித்திரை திருவிழா உற்சாகமாக துவக்கம்

கிருஷ்ணகிரி, மே 07-

கிருஷ்ணகிரி பழையபேட்டை நேதாஜி சாலையில் அமைந்துள்ள சமயபுர மாரியம்மன் கோவிலில் 21ஆம் ஆண்டு சித்திரை திருவிழா நேற்று முன்தினம் கோலாகலமாக துவங்கியது.திருவிழாவை முன்னிட்டு காலை 9 மணிக்கு கவீஸ்வரர் கோவில் அர்ச்சகர் நாகபூசணம் கோவிலில் கொடி ஏற்றி வைத்து விழாவைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து கணபதி ஹோமம் நடத்தப்பட்டு, பக்தர்களுக்கு கங்கணம் கட்டும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.நேற்று காலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பகல் 12 மணியளவில் அப்பகுதி மக்கள் பாரம்பரியமாக கூழை ஊர்வலமாக கொண்டு வந்து அம்மனுக்கு படைத்து, கூழ் ஊற்றும் நிகழ்ச்சி





நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பக்தி பரவசத்துடன் கலந்து கொண்டனர்.இன்று (மே 6) அதிகாலை 5 மணி முதல் அம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபாடு நடைபெற உள்ளது. தொடர்ந்து காலை 9 மணி முதல் பக்தர்கள் மாவிளக்கு எடுத்து ஊர்வலமாக செல்ல உள்ளனர். இதனைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.இந்த சித்திரை திருவிழா பல்வேறு ஆன்மிக மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகளுடன் நடைபெற இருப்பதால், பக்தர்கள் திரளாக பங்கேற்கின்றனர்.

# வர்த்தக ஒத்துழைப்பு: இந்தியா ஜமைக்கா ஒப்பந்தம்

கிங்ஸ்டன்::மே.7-

இந்தியா மற்றும் ஜமைக்கா நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. ஜமைக்கா நாட்டுக்கு 9 நாள் பயணமாகச் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் காமினா ஜே.ஸ்மித்தை திங்கள்கிழமை சந்தித்து விரிவாகப் பேசினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் ஜெய்சங்கர் கூறியதாவது: டிஜிட்டல் பரிமாற்றம், கலாச்சாரம், விளையாட்டு மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை ஆகிய துறைகளில் சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது



குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.கரீபியன் நாடுகளுக்கான வர்த்தக நுழைவாயிலாக ஜமைக்கா திகழ்கிறது. இந்நாட்டின் கிட்சன் நகரில் இந்திய உதவியுடன் ஊரக வாழ்வாதாரத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட ஜமைக்காவிற்கு மனிதாபிமான அடிப்படையில் 30 டயாலிசிஸ் இயந்திரங்கள், 40 மீன்பிடிப் படகுகள் மற்றும் 200 ஜிபிஎஸ் கருவிகளை இந்தியா வழங்கி வருகிறது. மேலும், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 202829 காலகட்டத்திற்கு இந்தியா தற்காலிக உறுப்பினராக ஜமைக்கா அளிக்கும் ஆதரவை வரவேற்கிறோம். இவ்வாறு அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

# முதல்வர் பதவியில் இருந்து மு.க.ஸ்டாலின் ராஜினாமா: ஆளுநர் அர்லேகர் ஏற்றுக் கொண்டார்

சென்னை::மே.7-

முதல்வர் ஸ்டாலினின் ராஜினாமா கடிதத்தை ஆளுநர் அர்லேகர் ஏற்றுக் கொண்டார். அடுத்த ஆட்சி அமையும் வரை பதவியில் தொடருமாறு ஸ்டாலினை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் கடந்த ஏப் .23ம் தேதி நடைபெற்றது. கடந்த 4ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் விஜய்யின் தவெக 108 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. திமுக கூட்டணி 73 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்ற நிலையில், தொடர்ந்து 2வது முறை ஆட்சியமைக்கும் வாய்ப்பை இழந்து, பிரதான



எதிர்க்கட்சியாக மாறியுள்ளது.இந்நிலையில், முதல்வர் பதவியை மு.க.ஸ்டாலின் நேற்று ராஜினாமா செய்தார். முதல்வர் மற்றும் அமைச்சர்களின் ராஜினாமா கடிதத்தை ஆளுநர் ஆர். வி.அர்லேகருக்கு அனுப்பி வைத்தார். இதுதொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்களின் ராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக்கொண்டார். மாற்று ஏற்பாடுகள் செய்யும் வரை பதவியில் தொடருமாறு ஸ்டாலினை ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காவேரிப்பட்டினம்-தர்மபுரி தேசிய நெடுஞ்சாலையில் மாம்பழக் கடைகள், விற்பனை மந்தம்,உற்பத்தி குறைவு, சுற்றுலா பயணிகள் வருகை குறைவால் விற்பனை பாதிப்பு

கிருஷ்ணகிரி, மே 07-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம்ஸ்ரீ தர்மபுரி தேசிய நெடுஞ்சாலையில், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சாலையோர மாம்பழக் கடைகள் அமைப்பது வழக்கமாகும். இந்த வழித்தடத்தில் பயணம் செய்யும் லாரி டிரைவர்கள், குடும்பத்துடன் சுற்றுலா செல்லும் பயணிகள் ஆகியோர் வாகனங்களை நிறுத்தி மாம்பழங்களை ருசித்து வாங்கிச் செல்வது ஆண்டுதோறும் நடைபெறும் காட்சி. ஆனால், இந்த ஆண்டு மழை குறைவு மற்றும் கடும் வெயில் காரணமாக மாம்பழ உற்பத்தி கணிசமாக குறைந்துள்ளது. இதன் விளைவாக சாலையோர தற்காலிக கடைகளில் விற்பனை செய்யப்படும் மாம்பழங்களின் விலையும் உயர்ந்துள்ளது. மாம்பழங்களின் தற்போதைய விலை நிலவரம் செந்தூரா – கிலோ ₹80, சேலம் பெங்களூரா – கிலோ ₹180,பங்கனப்பள்ளி –





கிலோ ₹120, மல்கோவா – கிலோ ₹150, இமாம் பசந்து – கிலோ ₹160, பீத்தர் – கிலோ ₹80, அல்போன்சா – கிலோ ₹150,காலாபகாடு – கிலோ ₹120,மல்லிகை – கிலோ ₹100. எர்ர அள்ளி பகுதியைச் சேர்ந்த மாம்பழ வியாபாரி சரஸ்வதி கூறுகையில், “மகளிர் சுயஉதவி குழு மூலம் கடன் பெற்று இந்த இரண்டு மாத சீசனில் மாம்பழ வியாபாரம் செய்து வருகிறோம். தேசிய நெடுஞ்சாலையில் இருந்து சுமார் 12 அடி தூரம் விலகி, பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன” என்றார்.மேலும் அவர் கூறுகையில், “இந்த ஆண்டு சுற்றுலா பயணிகள் வருகை குறைந்ததால் விற்பனை மந்தமாக உள்ளது. நாங்கள் ரசாயனங்கள் பயன்படுத்தாமல், வைக்கோல் மூலம் இயற்கையாக மாம்பழங்களை பழுக்க வைக்கிறோம். இவ்வாறு பழுத்த மாம்பழங்கள் 15–20 நாட்கள் வரை கெடாமல் இருக்கும். ரசாயன முறையில் பழுக்க வைத்தால் ஒரே நாளில் பழுத்து விடும்; அவற்றை உடனடியாக விற்க முடியாத சிக்கலும் உள்ளது. உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி இயற்கை முறையைப் பின்பற்றி வருகிறோம்” என தெரிவித்தார். மாம்பழத்தின் ஆரோக்கிய நன்மைகள்மாம்பழம் சுவைக்கு மட்டுமல்ல, பல ஆரோக்கிய நன்மைகளையும் வழங்குகிறது:உடல் சக்தி அதிகரிப்பு – இயற்கை சர்க்கரை மற்றும் கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்ததால் உடனடி சக்தி அளிக்கிறதுநோய் எதிர்ப்பு சக்தி – வைட்டமின் சி மற்றும் கி அதிகம் இருப்பதால் நோய் எதிர்ப்பு திறன் மேம்படும்கண் பார்வை பாதுகாப்பு – வைட்டமின் கி கண் ஆரோக்கியத்திற்கு உதவும்செரிமானம் மேம்பாடு – நார்ச்சத்து மற்றும் என்சைம்கள் செரிமானத்தை சீராக்கும்தோல் மற்றும் முடி ஆரோக்கியம் – ஆன்டிஆக்ஸிடண்டுகள் தோல் பொலிவை மேம்படுத்தும்உடல் சூட்டை சமநிலைப்படுத்துதல் – கோடைக்காலத்தில் உடலை குளிர்விக்க உதவும் முடிவு மாம்பழ சீசன் என்றாலும், இந்த ஆண்டு உற்பத்தி குறைவு மற்றும் பயணிகள் வருகை சரிவால் சாலையோர வியாபாரிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதே நேரத்தில், இயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பான தேர்வாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# தேனி மாவட்டம்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான கோடை காலப் பயிற்சி முகாம்

## மாவட்டஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தொடங்கி வைத்தார்

தேனி மே.07-

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ( சமூக நலத்துறை சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான கோடை காலப் பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தொடங்கி வைத்தார்.

புத்தக அறிவோடு, தனித்திறன்களை கற்றுத்தருவதன் மூலம் மாணவர்களை தன்னம்பிக்கை மிக்கவர்களாக மாற்றலாம். அதனடிப்படையில் பள்ளி மாணவர்களின் கோடை விடுமுறையினை புதிய திறன்களை கற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பாக மாற்றுவது மிகவும் அவசியம். மாணவர்களின் விருப்பம் மற்றும் தனித்திறமைகளை கண்டறிந்து, அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற முகாம்களில் மாணவர்கள் கலந்து கொள்வதன் மூலம் தங்களின் திறமைகளை வெளிகாட்டவும், விடுமுறை காலத்தை பயனுள்ள முறையில் கழிக்கவும் பயனுள்ளதாக அமையும். இம்முகாமில் ஓவியப்பயிற்சி, சிலம்பம், சதுரங்கம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் நாற்றங்கால் வளர்ப்பு முறை ஆகியவைகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. இம்முகாம் இன்றுமுதல் தொடர்ச்சியாக 20 நாட்கள் நடைபெற உள்ளது. இம்முகாமினை மாணவர்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் நடைபெற்ற முகாமில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் முதன்மைக் கல்வி அலுவலர் .நாகேந்திரன், மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணு பிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர். ஏ.எடிசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (மகளிர் அதிகார மையம்)

சாருமதி மற்றும் முகாம் பயிற்சியாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# பச்சை குத்திய பாசம்.மொட்டை அடித்த விசுவாசம்! பழனியில் பரபரப்பை ஏற்படுத்திய திமுக தொண்டர்கள்

திண்டுக்கல் மே .07-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரப் பகுதியில் இன்று ஒரு நெகிழ்ச்சியான மற்றும் பரபரப்பான சூழல் நிலவியது. திமுகவில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படை உறுப்பினராக இருந்து வருபவர் முத்துக்குமார். இவருடன் 32வது வார்டு துணைச் செயலாளர் மோகன்ராஜ் மற்றும் காளிமுத்து ஆகிய மூவரும், திமுகவின் தீவிர பற்றாளர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகளால் மிகுந்த மனவேதனை அடைந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

குறிப்பாக, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் தோல்வியைத் தழுவியதாக வெளிவந்த தகவல்களைத் தாங்களால் ஜீரணிக்க முடியவில்லை என்றும், கடந்த இரண்டு நாட்களாக உணவின்றித் தவித்ததாகவும் அவர்கள் கூறினர். இதில் ஒருவர், இந்தத் தோல்வியால் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் கூடத் தனக்குத் தோன்றியதாக கூறினார்

தங்கள் தலைவரின் மீதான விசுவாசத்தை வெளிப்படுத்தும் விதமாக, இன்று காலை இவர்கள் மூன்று பேரும் பழனி அடிவாரத்தில் மொட்டை அடித்துக் கொண்டனர். இதில் சேட் முத்துக்குமார் என்பவர், தனது 20 வயதிலேயே இரண்டு கைகளிலும் திமுகவின் கொடியைப் பச்சை குத்திக் கொண்டுள்ள தீவிரத் தொண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

'திமுக வாழ்க', 'அடுத்த தேர்தலில் எங்கள் ஸ்டாலின் தான் நிச்சயம் முதல்வர்' என அவர்கள் கோஷமிட்டது அங்கிருந்தவர்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# மாவட்டத்தில், 6 தொகுதிகளில் பயன்படுத்தப்பட்டவாக்குப்பதிவு எந்திரங்கள் அந்தந்த தொகுதிகளுக்கு அனுப்பி வைப்பு

கிருஷ்ணகிரி,மே.07-

மாவட்டத்தில் 6 தொகுதிகளில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள் அந்தந்த தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வாக்குப்பதிவு எந்திரங்கள் கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த 6 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் நேற்று முன்தினம் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தொடர்ந்து 6 தொகுதிகளில் பயன்படுத்தப்பட்ட 2,508 வாக்குச்சீட்டு பதிவு எந்திரங்கள், 2,508 வாக்குப்பதிவு கட்டுப்பாட்டு எந்திரங்கள்



மற்றும் 2,717 வாக்காளர் பதிவு சரிபார்க்கும் எந்திரங்கள் என மொத்தம் 7,733 வாக்குப்பதிவு எந்திரங்கள் மீண்டும் அந்தந்த தொகுதிகளுக்கு வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்படி, கிருஷ்ணகிரி தொகுதியில் வாக்குகள் பதிவான மின்னணு எந்திரங்கள், கிருஷ்ணகிரி உதவி கலெக்டர் அலுவலகத்திலும், ஓசூர் தொகுதி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக பாதுகாப்பு அறையிலும், வேப்பனப்பள்ளி தொகுதி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், ஊத்தங்கரை தொகுதி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், பர்கூர் தொகுதி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், பர்கூர் தாசில்தார் அலுவலகத்திலும் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டன.இது குறித்து அலுவலர்கள் கூறியதாவது:-தேர்தல் ஆணைய உத்தரவுப்படி. மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்து அந்தந்த தொகுதிக்குப்பட்ட அலுவலங்களில் 45 நாட்கள் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்படும். பின்னர் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அவை அங்கிருந்து கலெக்டர் அலுவலக வளாகத்தில் பாதுகாப்பு அறைக்கு மாற்றப்படும் அல்லது வேறு மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.





■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வெப்பம் மற்றும் வெப்ப அலை பாதிப்புக்களை தடுக்க செய்ய வேண்டியவை மற்றும் வெயிலில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.சு.துரைமுருகன், முதல்வர் (அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை) மரு.மனோண்மணி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.




# சித்திரை திருவிழா முடிந்தும் தொடர்ந்து மோர் வழங்கும் பசுமை செயல் குழு

மானாமதுரை மே.07-

மானாமதுரையில் சித்திரை திருவிழா நிறைவடைந்த பின்னரும், கோடை வெயிலின் தாக்கத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களின் தாகம் தணிக்க பசுமை செயல் குழு சார்பில் தொடர்ந்து நீர்மோர் வழங்கும் மனிதநேய சேவை நடைபெற்று வருகிறது. அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் கோயில் அருகே நடைபெறும் இந்த முகாமில், தினமும் ஆட்டோ ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் நீர்மோர் பருகி பயனடைந்து வருகின்றனர். திருவிழா காலத்தை தாண்டியும் பொதுமக்களின் நலனை முன்னிறுத்தி தொடர்ந்து சேவை செய்து வரும் பசுமை செயல் குழுவினரின் இந்த செயல் மானாமதுரை மக்களிடையே பாராட்டை பெற்று வருகிறது.



# யுஏஇ துறைமுகம் மீது ஈரான் தாக்குதல்: 3 இந்தியர்கள் படுகாயம் பிரதமர் மோடி கண்டனம்

துபாய்::மே.7-

ஐக்கிய அரபு அமீரகத்தின் (யுஏஇ) புஜைரா துறைமுகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதில் 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தனர். இதற்கு பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பிப்ரவரி 28ம் தேதி முதல்போர் நடைபெற்றது. தற்போது இருதரப்பு இடையே போர் நிறுத்தம் அமலில் உள்ளது. எனினும் ஹார்முஸ் ஜலசந்தியைஈரானும் அமெரிக்காவும் முடக்கி வைத்து உள்ளன. இந்த சூழலில் அமெரிக்காவின் நட்பு நாடான ஐக்கிய அரபு அமீரகத்தின் புஜைரா துறைமுகத்தின் மீது ஈரான் ராணுவம் நேற்று முன்



தினம் 15 ஏவுகணைகளை வீசியது. மேலும் ட்ரோன்கள் மூலமும் தாக்குதல் நடத்தியது. இதில் துறைமுக பகுதியில் பணியாற்றிய 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து அமீரக ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, ''ஈரான் வீசிய ஏவுகணைகளில் பெரும்பாலானவற்றை நடுவானில் அழித்துவிட்டோம். ஆனால் சில ஏவுகணைகள் எண்ணெய் கிடங்குகளில் விழுந்து தீப்பற்றியது. 3 தொழிலாளர்கள் காயமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவமனையில் உயர்தர சிகிச்சை அளிக்கப்படுகிறது'' என்று தெரிவித்தன.இதுதொடர்பாக பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: ஐக்கிய அரபு அமீரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 3 இந்தியர்கள் காயமடைந்து உள்ளனர். உள்கட்டமைப்புகள், பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த நேரத்தில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இந்தியா துணை நிற்கும்.ராஜ்ஜியரீதியிலும் பேச்சுவார்த்தை மூலமும் அமைதியை ஏற்படுத்த இந்தியா ஆதரவு அளிக்கும். உலகத்தின் எரிசக்தி தேவை, பிராந்திய அமைதியை கருத்தில் கொண்டு ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கடல்வழி போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.ஈரான் ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, “அமெரிக்க ராணுவத்தின் ஏற்பாட்டின்பேரில் ஐக்கிய அரபு அமீரக துணையுடன் ஹார்முஸ் ஜலசந்தியில் சில சரக்கு கப்பல்கள் கடந்து சென்று உள்ளன. இதன்காரணமாக ஐக்கிய அமீரக துறைமுகத்தின் மீது ஏவுகணை தாக்குதலை நடத்தினோம். அமெரிக்கா அத்துமீறினால் தகுந்த பதிலடி கொடுப்போம். ஹார்முஸ் ஜலசந்தியை நெருங்கி வந்த அமெரிக்க போர்க்கப்பல்களை எச்சரிக்கும் வகையில் சில ஏவுகணைகளையும் வீசினோம்'' என்று தெரிவித்தன.

# திருப்பதி கோயிலில் 2.45 லட்சம் பக்தர்கள் தரிசனம்: ரூ.12 கோடி உண்டியல் காணிக்கை

திருமலை: :மே.7-

கோடை விடுமுறை என்பதால் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வழக்கத்திற்கும் அதிகமாக பக்தர்களின் கூட்டம் உள்ளது. அதுவும் கடந்த வெள்ளி (தொழிலாளர் தினம்), சனி, ஞாயிறு ஆகிய 3 நாட்களும் அரசு விடுமுறை நாட்கள் என்பதால், கூட்டம் மேலும் அதிகரித்தது.இதனால் கோயிலுக்கு வெளியே சுமார் 5 கி.மீ. தூரம் வரை பக்தர்கள் வரிசையில் தரிசனத்துக்காக காத்திருந்தனர். கோடை காலத்தில் கூட்டம் அதிகரிக்கும் என்பதால் கடந்த மே 1ம் தேதி முதல் 2 மாதங்களுக்கு விஐபி பிரேக் தரிசன முறையை தேவஸ்தான நிர்வாகத்தினர் முற்றிலுமாக ரத்து செய்தனர்.



எஸ்எஸ்டி (டோக்கன் உள்ள சர்வ தரிசனம்) 3 மணி நேரத்துக்குள்ளும், ரூ.300 சிறப்பு தரிசனம் இரண்டரை மணி நேரத்துக்குள்ளும் சுவாமியை தரிசித்து விடுகின்றனர்.

சாதாரண நாட்களில் தினமும் 65 முதல் 70 ஆயிரம் பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்வர். ஆனால், தற்போது கடந்த 3 நாட்களில் மட்டுமே 2.45 லட்சம் பக்தர்கள் சுவாமியை தரிசித்து உள்ளனர். இதனால் கடந்த 3 நாட்களில் மட்டுமே உண்டியல் மூலம் ரூ.11.95 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த மே 2ம் தேதி அதிகபட்சமாக 91,005 பக்தர்கள் சுவாமியை தரிசித்தனர். மே 3ம் தேதி மட்டுமே உண்டியலில் ரூ.5.06 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# 2 இந்திய செய்தியாளர்களுக்கு புலிட்சர் பரிசு

நியூயார்க்: மே.7-

இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா ஆகியோருக்கு புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.அமெரிக்க செய்தியாளர் ஜோசப் புலிட்சர் நினைவாக, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகம் சார்பில் ஆண்டுதோறும் புலிட்சர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி இதழியல், இலக்கியம், உள்ளிட்ட துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நேற்று முன்தினம் புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டது. இதில் இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா ஆகியோர் உள்ளனர்.டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக, ''டிராப்டு'' என்ற பெயரில் முன்னணி ஊடகத்தில் விழிப்புணர்வு கார்ட்டூன் தொடர் வெளியானது. இந்த படைப்புக்காக ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா மற்றும் ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சனுக்கு புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டு உள்ளது. மகாராஷ்டிர தலைநகர் மும்பையை சேர்ந்த ஆனந்த் ஆர்கே, இந்திய கடற்படை மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்காக புதுமையான கலை படைப்புகளை உருவாக்கி கொடுத்திருக்கிறார்.டெல்லியை சேர்ந்த செய்தியாளர் சுபர்ணா சர்மா, அல் ஜெசீரா, பிபிசி, இந்து குழுமத்தின் பிரன்ட்லைன் இதழ் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் செய்திகள், கட்டுரைகளை எழுதியுள்ளார். ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சன் பிரதமர் மோடியின் அரசியல் வளர்ச்சி குறித்துஅவர் எழுதிய செய்திகள், கட்டுரைகள் உலக அளவில் பெரும் கவனத்தை ஈர்த்தன.



# செங்குன்றம் பாலவாயல் சிக்னல் அருகே பொதுமக்களுக்கு சுவையான மோர் வழங்கல்

மாதவரம், மே.7-

ஏ.ஆர்.டி.எஸ். சோசியல் எக்னாமிக் டெவெலப்மென்ட் டிரஸ்ட் மற்றும் அறிவு கடல் திருவள்ளுவர் அறக்கட்டளை சார்பாக செங்குன்றம் சோத்துப்பாக்கம் பைபாஸ் சிக்னல் அருகே நலிவடைந்த மக்கள் நல பணி தினமும் பசியாற்றுதல் பகல் 12 மணிக்கு கோடை வெப்பத்தை தனிக்கும் வகையில் பொதுமக்களுக்கு சுவையான மோர் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சினை ஏ ஆர் தர்மலிங்கம் அறக்கட்டளையும் மற்றும் மக்கள் சேவகர் கே அந்தோணி தலைமையில் இயங்கும் அறிவு கடல் அறக்கட்டளையும் சேர்ந்து ஏற்பாடு செய்தனர் இதில் சமூக ஆர்வலர்கள் பாஸ்கர், மணிகண்டன், கோபால், டில்லி, ரமேஷ், தனஞ்செழியன், விஜயகுமார் உள்ளிட்ட அறக்கட்டளையின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்




# தமிழ்நாடு ஆளுநர் அர்லேகரை தவெக தலைவர் விஜய் சந்திப்பு

சென்னை:மே.7-

தமிழ்நாடு ஆளுநர் அர்லேகரை தமிழக வெற்றிக்கு கழகத் தலைவர் விஜய் சந்திப்பு மேற்கொண்டார். ஆட்சி அமைக்க உரிமை கோருவது தொடர்பாக ஆளுநர் அர்லேகருடன் தவெக தலைவர் விஜய் சந்தித்தார்

# கேரள மாநிலத்தின் அடுத்த முதல்வர் யார்? காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் தீவிர பரிசீலனை

திருவனந்தபுரம்:மே.7-

கேரள மாநிலத்தின் அடுத்த முதல்வர் யார் என்பதைத் தேர்வு செய்யும் பணியில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் தீவிரமாக உள்ளனர்.

கேரள மாநில சட்டப்பேரவைக்கு கடந்த ஏப்ரல் 9ம் தேதி தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின்போது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி(யுடிஎஃப்) 102 இடங்களைப் பெற்று ஆட்சி அமைக்கவுள்ளது. கடந்த 2016 முதல் 2010 வரை ஆட்சியில் இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி(எல்டிஎஃப்) 35 இடங்களையும், பாஜக 3 இடங்களையும் கைப்பற்றியது.

இந்நிலையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு கேரளாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வருவதால் காங்கிரஸ் தொண்டர்கள் படு உற்சாகத்தில் உள்ளனர். இதனிடையே முதல்வர் பதவியில் அமரப் போகும் காங்கிரஸ் தலைவர் யார் என்ற போட்டி காங்கிரஸ் மூத்த தலைவர்களிடையே ஏற்பட்டுள்ளது.





பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், மூத்த தலைவருமான வி.டி.சதீஷன், மூத்த தலைவர் ரமேஷ் சென்னிதலா, மாநிலங்களவை எம்.பி. கே.சி.வேணுகோபால் ஆகியோர் முதல்வர் பதவியை பெறுவதற்கான பந்தயத்தில் உள்ளனர்.

இந்நிலையில் கேரளாவில் ஆட்சியை அமைப்பதற்கான பணியில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலரும், கேரள மாநில பொறுப்பாளருமான தீபா தாஸ் முன்ஷி உள்ளிட்டோர் திருவனந்தபுரத்தில் முகாமிட்டுள்ளனர்.

அவர்கள் கட்சித் தலைவர்கள், எம்எல்ஏக்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர். மேலும் ஒவ்வொரு எம்எல்ஏவை யும் தனித்தனியாக அழைத்துப் பேசவும் காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் காங்கிரஸ் கட்சியின் முக்கிய கூட்டணிக் கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக்(ஐயுஎம்எல்) தலைவர்களையும், மேலிடத் தலைவர்கள் சந்தித்து ஆலோசிக்கவுள்ளனர்.

இதைத் தொடர்ந்து நடைபெறும் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டத்தில், கேரள முதல்வரைத் தேர்வு செய்யும் முடிவை காங்கிரஸ் மேலிடத்துக்கு வழங்கும் தீர்மானம் இயற்றப்படும் என்று மேலிட வட்டாரங்கள் தெரிவித்தன.

தோல்வி யாரால்?

இதனிடையே எல்டிஎஃப் கூட்டணி தோல்விக்கான காரணம் குறித்து ஆய்வு நடத்த இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். எல்டிஎஃப் அரசில் இருந்த 13 அமைச்சர்கள் தேர்தலில் தோல்வி கண்டுள்ளனர். இதுதொடர்பாகவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சார்பில் ஆலோசனை நடத்தப்படவுள்ளது. மேலும் தோல்விக்குப் பின்னர் பத்திரிகையாளர்களை முதல்வர் பினராயி விஜயன் சந்திக்கவில்லை. விரைவில் அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேட்டியளிப்பார் எனத் தெரிகிறது.

# அசாம், மேற்கு வங்கத்தில் கிங் மேக்கராக விரும்பிய முஸ்லிம் தலைவர்களுக்கு பின்னடைவு

புதுடெல்லி::மே.7-

அசாம் மற்றும் மேற்கு வங்கத்தில் முஸ்லிம்கள் 30% முதல் 35% வரை உள்ளனர். கணிசமான தொகுதிகளின் வெற்றியை இவர்கள் தீர்மானிக்கிறார்கள். எனினும் முஸ்லிம் அரசியல் செய்யும் கட்சிகளை இம்மாநிலங்களில் உள்ள முஸ்லிம்கள் இம்முறை முழுமையாக நம்பவில்லை.இதன் விளைவாக, அசாமில் ஏஐயுடிஎப் தலைவர் பத்ருதீன் அஜ்மல் படுதோல்வி அடைந்தார். கடந்த தேர்தலில் 16 தொகுதிகளில் வெற்றி பெற்ற இவருக்கு இம்முறை 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி கிடைத்தது. அசாமில் தனித்து போட்டியிட்ட காங்





கிரஸ், 20 முஸ்லிம்களை வேட்பாளர்களாக்கியது. இவர்களில் 18 பேர் வெற்றி பெற்றனர். முஸ்லிம் அல்லாத 79 வேட்பாளர்களில் ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளார்.மேற்கு வங்கத்தில் முஸ்லிம்கள் சுமார் 30% உள்ளனர். இங்கு 100க்கும் மேற்பட்ட தொகுதிகளில் முஸ்லிம்கள் பங்கு அதிகம். இங்குள்ள முர்ஷிதாபாத்தில் பாபர் பெயரில் மசூதி கட்டுவதாக அறிவித்தவர் ஹுமாயூன் கபீர். இதனால், டிஎம்சியில்இருந்து நீக்கப்பட்ட இவர் புதிய கட்சி தொடங்கினார். ஏஜஎம்ஜஎம் தலைவர் அசாதுதீன் ஒவைசியுடன் கூட்டணி வைத்து தேர்தலில் போட்டியிட்டார்.எனினும் ஹுமாயூன் பாஜகவுடன் ரூ.1,000 கோடி பேரம் பேசுவதுபோல் ஒரு காட்சிப் பதிவு வெளியானதை தொடர்ந்து இவருடனான கூட்டணியை ஒவைசி ரத்து செய்து தனித்துப் போட்டியிட்டார். இந்நிலையில் ஹுமாயூன் தான் போட்டியிட்ட இரு தொகுதிகளைத் தவிர, மாநிலத்தின் பிற பகுதிகளில் தோல்வி அடைந்துள்ளார். ஒவைசியின் கட்சியும் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெறவில்லை.

ஹுமாயூன், ஒவைசி ஆகிய இருவரும் ஆளும் திரிணமூல் காங்கிரஸின் வாக்குகளைப் பிரித்துள்ளனர். மற்றொரு முஸ்லிம் தலைவரான பீர் ஜாதா அப்பாஸ் சித்திக்கீயும் முஸ்லிம் வாக்குகளைப் பிரித்துள்ளார்.

இந்தமுறை டிஎம்சியுடன் இடது சாரி மற்றும் காங்கிரஸுக்கும் முஸ்லிம்கள் வாக்குகளைப் பிரித்தளித்து விட்டனர். காங்கிரஸுக்கு கிடைத்த 2 தொகுதிகளில் வென்ற இருவருமே முஸ்லிம்கள்.

இதன் காரணமாக, முஸ்லிம் அரசியலை கடுமையாக எதிர்த்த பாஜகவுக்கு அசாமில் தொடர் வெற்றியும், மேற்கு வங்கத்தில் முதல்முறை வெற்றியும் கிடைத்துள்ளது. அசாமில் பத்ருத்தீன் அஜ்மலும், மேற்கு வங்கத்தில் ஒவைசி, ஹுமாயூன் உள்ளிட்ட முஸ்லிம் தலைவர்களின் அரசியல் செல்வாக்கை பாஜக நீர்த்துப் போகச் செய்துள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161